பக்கங்கள் 14+3

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2058 | தை 25 ஞாயிற்றுக்கிழமை 08.02.2026 | அதிர்வு 191

## நீர்கொழும்பில் நேற்று கைத்துப்பாக்கி மீட்பு!



நீர்கொழும்பு, துன் கல்பிடிய கடற்கரை வீதிக்கு அருகில் கைத்துப்பாக்கி ஒன்று மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

03

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



### ஸ்ரீ ரெலோ கட்சியின் தலைவர்

# உதயராசா கைது!

## போதைப்பொருள் கடத்தல் குற்றச்சாட்டில்

ஸ்ரீ ரெலோ கட்சியின் தலைவர் ப.உதயராசா கைது செய்யப்பட்டு, தடுப்புக் காவலில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

அதன்படி, 7 நாட்கள் தடுப்புக் காவலில் அவர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

போதைப்பொருள் கடத்தல் குற்றச்சாட்டில், நீர்கொழும்பு, கொச்சிக்கடைப் பகுதியில் வைத்து உதயராசா கைது செய்யப்பட்டுள்ளார்.

பேலியகொடைப் பகுதியில் கடந்த மாதம் 29 ஆம் திகதி 4 கிலோ 423 மில்லிகிராம் கொக்கேய்ன் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது.

02

# அரசியல் தீர்வு விடயத்தில் தமிழ்த் தரப்புக்கள் பொது நிலைப்பாட்டை எட்டுவதற்கு முயற்சி!

## சுவிஸ் தூதரகத்தின் ஏற்பாட்டில் 19 ஆம் திகதி பேச்சு



இலங்கையின் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு விடயத்தில் தமிழ்த் தரப்புக்கள் அனைத்தையும் ஒருமித்த நிலைப்பாட்டுக்குக் கொண்டுவரும் நோக்கில் சுவிட்ஸர்லாந்து தூதரகத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் 19 ஆம் திகதி தமிழ்த் தேசியக் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கு இடையிலான விசேட சந்திப்பு கொழும்பில் நடைபெறவுள்ளது.

இலங்கை – சுவிட்ஸர்லாந்து நாடாளுமன்ற நட்புறவு சங்கத்துடன் கூட்டிணைந்து சுவிட்ஸர்லாந்து அரசின் ஏற்பாட்டில் அந்நாட்டின் கூட்டாட்சி அரசியல் முறைமை மற்றும் தேசிய ஒருமைப்பாடு வலுவாக்கம் என்பன பற்றி இலங்கையின் ஆளும் மற்றும் எதிர்க் கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்களுக்குத் தெளிவூட்டும்

03

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்-Bonding Tamils Globally



# வர்த்தமானி கூட சரியாக வெளியிட முடியாத அரசு

## பட்டதாரிகளுக்கு பாரிய அநீதி என்று சஜித் சீற்றம்

தற்போதைய அரசால் ஒரு குறிப்பிட்ட நோக்கத்துடன் வர்த்தமானி ஒன்றைக் கூட அச்சிட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சுமத்தியுள்ளார்.

ஆசிரியர் சேவைக்கான போட்டிப் பரீட்சைக்காக வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலில், 2025 ஜூன் 30 ஆம் திகதிக்கு முன்னர் பட்டப்படிப்பை நிறைவு செய்தவர்களே தகுதியுடையவர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர். இந்தத் தீர்மானத்தினால், அதற்குப் பின்னர் பட்டப்படிப்பை முடித்த பெருமளவான இளைஞர், யுவதிகளுக்குப் பாரிய அநீதி இழைக்கப்பட்டுள்ளது என்று சஜித் சுட்டிக் காட்டியுள்ளார்

ஆசிரியர் சேவை வர்த்தமானியில் உள்ள குறைபாடுகள் குறித்து இன்று விசேட அறிவிப்பொன்றை விடுத்துள்ள அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்

“இந்த வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியை நீடித்து, புதிய வர்த்தமானி அறிவித்தலை அரசு வெளியிட வேண்டும்.

வர்த்தமானிகளை வெளியிடுவதற்கு முன்னர் அரச தொழில் கோரும் பட்டதாரிகள் சங்கத்தின் உறுப்பினர்களது கருத்துக்களையும் கேட்டறியுமாறு அரசைக் கேட்டுக்கொள்கின்றேன்.

2025 டிசம்பர் மாதம் வரை பட்டப் படிப்பை நிறைவு செய்த அனைவரும் ஆசிரியர் சேவைப் பரீட்சைக்குத் தோற்றக் கூடிய வகையில் இந்த வர்த்தமானி திருத்தப்பட வேண்டும். அவ்வாறு செய்யத் தவறினால் அது பட்டதாரிகளுக்கு இழைக்கப்படும் பாரிய அநீதியாகும்.” - என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மேலும் தெரிவித்துள்ளார்.




# காதல் விவகாரத்தால் குழு மோதல்! இளைஞர் ஒருவர் வெட்டிக்கொலை!!

## தென்னிலங்கையில் பயங்கரம்

குழு மோதலில் இளைஞர் ஒருவர் கொடூரமாக வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தப் பயங்கர சம்பவம் கம்பஹா மாவட்டம், தொம்பே பிரதேசத்தில் நேற்று சனிக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த 26 வயதுடைய இளைஞரே படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் தலைமறைவாகியுள்ளனர்.

அவர்களைக் கைது செய்யப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

காதல் விவகாரமே இந்தக் கொலைக்கான காரணம் என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

**உதயராசா...**

இந்தப் போதைப்பொருள் கடத்தல் சம்பவத்துடன் ஸ்ரீ ரெலோ கட்சியின் தலைவர் உதயராசா தொடர்புபட்டுள்ளார் என்ற சந்தேகத்தின் அடிப்படையிலேயே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேல் மாகாணத்தின் வடக்கு குற்றத் தடுப்புப் பிரிவினரால் அவர் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்றும் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்நிலையில், கொழும்பில் இடம்பெற்றதாகக் கூறப்படும் பல முக்கிய குற்றச் செயல்களுடன் உதயராசா தொடர்புபட்டுள்ளார் என முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகள் தொடர்பிலும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.



# ஹெரோயின் போதைப்பொருளுடன் பல்கலை மாணவி ஒருவர் சிக்கினார்!

## காதலனைத் தேடி பொலிஸார் வலைவீச்சு

ஹெரோயின் போதைப்பொருளுடன் இளம் யுவதி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அம்பாந்தோட்டை, வீரகெட்டிய பிரதேசத்தில் வைத்து மேற்படி யுவதி நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

அதே பிரதேசத்தைச் சேர்ந்த 22 வயதுடைய யுவதியே கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த யுவதி பல்கலைக்கழகம் ஒன்றில் டிப்ளோமாக் கற்கைநெறியைப் பயின்று வருகின்றார் என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

ஹெரோயின் போதைப்பொருள் தொடர்பில் அதே பல்கலைக்கழகத்தில் கற்கும் யுவதியின் காதலன் மீது சந்தேகப்பட்டுள்ள பொலிஸார், அவரைக் கைது செய்வதற்கான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### அரசியல் தீர்வு...

வகையிலான செயலமர்வு கடந்த வருடம் செப்டெம்பர் மாதம் 14 – 21 ஆம் திகதி வரை சுவிட்ஸர்லாந்தில் நடைபெற்றது.

அந்தச் செயலமர்வில் தேசிய மக்கள் சக்தியின் சார்பில் அமைச்சர் கலாநிதி உபாலி பன்னிலகே, பிரதி அமைச்சர் முனீர் முளப்பர், நாடாளுமன்ற உறுப்பினரும் தேசிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளருமான நிஹால் அபேசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர்களான சந்திம ஹெட்டியாராச்சி, நிலாந்தி கொட்டஹச்சி, சமன்மலி குணசிங்க ஆகியோரும், பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ஜே.சி.அலவத்துவலவும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் பத்மநாதன் சத்தியலிங்கமும், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும், ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் அதன் பொதுச்செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான தலதா அத்துகோரளவும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் சார்பில் அதன் ஊடகப் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரனும், மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர் டபிள்யூ.ரி.பத்மா மஞ்சுளவும், தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினரும் யாழ் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருக்கான ஒருங்கிணைப்பு செயலாளருமான கபிலன் சுந்தரமூர்த்தியும் கலந்துகொண்டிருந்தனர்.

அந்தச் செயலமர்வின்போது சுவிட்ஸர்லாந்தின் அரசியல் முறைமை மற்றும் இருதரப்பு உறவுகள், சுவிட்ஸர்லாந்தின் கூட்டாட்சி (பெடரல்) முறைமையை ஆழமாகப் புரிந்துகொள்ளல் ஆகிய தலைப்புக்களில் இலங்கை அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கு விரிவான தெளிவூட்டல்கள் வழங்கப்பட்டதுடன், அதனுடன் தொடர்புடைய முக்கிய கட்டமைப்புக்களுக்கான கள விஜயங்கள் மற்றும் உயர்மட்ட சந்திப்புக்கள் என்பனவும் இடம்பெற்றன.

அந்த விஜயத்தைத் தொடர்ந்து அது பற்றி அதில் பங்கேற்ற கஜேந்திரகுமார் பொன்னம்பலம் உள்ளிட்ட பிரதிநிதிகளிடம் கேட்டறிந்த இலங்கைக்கான சுவிட்ஸர்லாந்து தூதுவர் சிறி வோல்ற், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரனையும் சந்தித்து மேற்படி விஜயம் குறித்து விளக்கமளித்திருந்தார்.

இவ்வாறு நிகழ்ந்த சந்திப்புக்களின் போது தமிழர்களுக்கான அரசியல் தீர்வு விடயத்தைப் பொறுத்தமட்டில் சகல தமிழ்த் தேசியக் கட்சிகளும் ஒருமித்த நிலைப்பாட்டுக்கு வரவேண்டியது அவசியம் என்பன விடயம் தமிழ்ப் பிரதிநிதிகளால் தூதுவர் சிறி வோல்ற்றிடம் எடுத்துரைக்கப்பட்டது.

இவ்வாறானதொரு பின்னணியில் சுவிட்ஸர்லாந்து தூதரகத்தின் ஒருங்கிணைப்பில் ஒரு கூட்டு சந்திப்பை நடாத்துவதற்கு தமிழ்த் தேசியக் கட்சிகள் உடன்பட்டதை அடுத்து, அதனை எதிர்வரும் 19 ஆம் திகதி கொழும்பில் நடாத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பில் இலங்கைத் தமிழரசுக்கட்சி சார்பில் அதன் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன், நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சாணக்கியன், நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சிறீதரன் மற்றும் ப.சத்தியலிங்கம் ஆகியோரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சார்பில் அதன் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் கட்சி தீர்மானிக்கும் பிறிதொருவரும், ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் சார்பில் அதன் ஊடகப் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் மற்றும் கூட்டணி தீர்மானிக்கும் பிறிதொருவரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

அதுமாத்திரமன்றி சிவில் சமூகத்தின் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி குமாரவடிவேல் குருபரனுக்கு அழைப்பு விடுப்பதற்கு சுவிஸ் தூதரகம் தீர்மானித்திருப்பதாக அறியமுடிகின்றது.

சுவிட்ஸர்லாந்து உயர்ஸ்தானிகர் சிறி வோல்ற்றின் மத்தியஸ்தத்தில் நடைபெறவிருக்கும் இந்தச் சந்திப்பின்போது தமிழர்களுக்கான அரசியல் தீர்வு விடயத்தில் சகல தமிழ்த் தரப்புக்களும் ஒருமித்த நிலைப்பாட்டுக்கு வருவது பற்றிக் கலந்துரையாடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

---

### நீர்கொழும்பில்...

இராணுவ புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய பொலிஸ் விசேடஅதிரடிப்படையினருடன்இணைந்து நேற்று மாலை முன்னெடுத்த தேடுதலின் போதே இந்தக் கைத்துப்பாக்கி மீட்கப்பட்டுள்ளது.

பிரதேசத்திலுள்ள கடற்கரை அணுகல் வீதியின் அருகே மறைத்து வைக்கப்பட்டிருந்த 7.65 மில்லிமீற்றர் ரக கைத்துப்பாக்கியே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் துன்கல்பிடிய பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# பிரிட்டனே குற்றவாளி

பிரித்தானியா தனது வர்த்தக நோக்கங்களுக்காக, இலங்கையில் பெருந்தோட்டங்களை அமைக்க, தென்னிந்தியாவில் இருந்து அழைத்து வந்த ஒப்பந்தத் தொழிலாளர்களின் வம்சாவளிகள்தான் இன்றைய மலையகத் தமிழர்கள். அந்த அடிப்படையில் அவர்கள் தொடர்பில், பிரித்தானியாவுக்கு உள்ள தார்மீக மற்றும் சட்டக் கடப்பாடுகளை இலங்கையில் உள்ள பிரித்தானிய உயர் ஸ்தானிகர் அன்ட்றூ பற்றிக்கைச் சந்தித்து மிகத் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார் தமிழ் முற்போக்குக் கூட்டணித் தலைவர் மனோ கணேசன் எம்.பி.

மலையகத் தமிழருக்கு நியாயம் பெற்றுத் தருவதில், அவர்களின் குடியுரிமை முழுக் குடியுரிமையாக வழங்கப்படுவதில், அவர்கள் இரண்டாம் தரப் பிரஜைகளாக நடத்தபடுவது நிறுத்தப்படுவதில், அவர்களுக்கு இரண்டு நூற்றாண்டுகளாக மறுக்கப்பட்டு வரும் காணி உரிமையை உறுதிப்படுத்துவதில், சர்வதேச சமூகம் மற்றும் இலங்கையின் அபிவிருத்தி பங்காளிகள் ஆகிய அணிகளுக்கு பிரித்தானியா தலைமைப் பாத்திரம் வகிக்க வேண்டிய கட்டாயக் கடப்பாடும் பொறுப்பும் கொண்டது என்பதை விவரமாக - விளக்கமாக - பிரித்தானிய உயர் ஸ்தானிகருக்கு எடுத்துரைத்திருக்கின்றார் மனோ கணேசன்.

ஈழத் தமிழர்களுக்கு நியாயம் செய்யும் விடயத்திலும் சர்வதேச சமூகம் மற்றும் இலங்கையின் அபிவிருத்திப் பங்காளிகள் ஆகிய அணிகளுக்கு பிரித்தானியா தலைமைப் பாத்திரம் வகித்து, தமிழ் மக்களின் நியாயமான எதிர்பார்ப்புகள் நிறைவேற உதவிட வேண்டும் என்றும் அவர் கோரியிருக்கின்றார்.

இலங்கையில் தமிழ் மக்கள் - அவர்கள் வடக்கு, கிழக்குத் தமிழர்களாயினும், மலையகத் தமிழர்களாயினும் - இவ்வளவு தூரம் அவலப்படும் நிலையில் அல்லறுவதற்குப் பிரதான சூத்திரதாரிகள் பிரிட்டன்தான். அவர்கள் மீதும் தங்களுடைய கொலனித்துவ ஆட்சி அதிகாரத்தை செலுத்திவிட்டு அவர்களின் உரிமைகளையும் உரித்துக்களையும் பேரினவாத பௌத்த - சிங்களத் தலைமையிடம் ஒப்படைத்துவிட்டு அவர்களை நட்டாற்றில் விட்டுச் சென்றது பிரிட்டன்தான்.

பிரிட்டனுக்கு முன்னர் இலங்கைத் தீவைக் கைப்பற்றிய அந்நியர்களான போத்துக்கீசரும் ஒல்லாந்தரும் ஈழத் தமிழினத்தின் தனித்துவ இறைமையைத் தாங்களும் கைப்பற்றி ஆண்டனராயினும், அதை தனியாகவே தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துக் கையாண்டனர். ஆனால் தாங்கள் கைப்பற்றிய சிங்களத்தின் இறைமையைத் தங்களின் நிர்வாக வசதிக்காக தமிழர் தேசத்தின் இறைமையோடு ஒன்றாக்கி, தமிழர் தேசத்தின் தனித்துவத்தை சிங்கள - பௌத்த பேரினவாதப் பிடியில் ஒப்படைத்து, அதன் மூலம் தமிழர்களை சிங்களத்தின் அடிமையாக்கிச் சென்றது பிரிட்டனே.

இந்த வகையில் பார்த்தால் இலங்கையில் இன்று தமிழர்களுக்கு இழைக்கப்படும் அனைத்துக் கொடூரங்களுக்கும் அடக்குமுறைகளுக்கும் மேலாண்மை நெருக்குவாரங்களுக்கும் பிரதான சூத்திரதாரி - குற்றவாளி - பொறுப்பாளி - தவறிழைத்த தரப்பு - பிரிட்டன்தான்.

தான் இழைத்த இந்தக் கொலனித்துவக் காலக் குற்றங்களுக்கு பரிகாரம் செய்ய பிரிட்டன் உரிய முறையில் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதுதான் இப்போதைய வேதனைக்குரிய நிலைமையாகும்.


குணம்ஸ்
சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998


GOLDEN VOICE
OF NORTH
குரல்
தேர்வு
விரைவில்...!
a one
MURASU digital
tamil one




# சாரணர் பயிற்சிக்கு பொறுப்பான ஆணையாளர்களுக்கு பயிற்சி நெறி

(திகாமடுல்ல நிருபர்)

இலங்கை சாரணர் சங்கத்தின் பிரதம சாரண ஆணையாளரின் மனோஜ் லசந்த நாணயக்காரவின் வழிகாட்டலின் கீழ் தேசிய பயிற்சிக் பிரிவின் ஏற்பாட்டில் பயிற்சிக்கு பொறுப்பான உதவி மாவட்ட ஆணையாளர்களுக்கான ஒரு நாள் பயிற்சி நெறி சாரணர் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது.

தேசிய பயிற்சி ஆணையாளர் பத்மலால் பெரேரா தலைமையில் நடைபெற்ற இந்தப் பயிற்சி நெறிக்கு சகல மாவட்டங்களிலிருந்தும் பயிற்சிக்கு பொறுப்பான உதவி மாவட்ட ஆணையாளர்கள், தலைமை அலுவலகப் பிரதி, உதவி ஆணையாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

சந்தோசமான சாரணர் வாழ்க்கையை உருவாக்குதல், மாகாண ரீதியில் பயிற்சி ஆணையாளர்களை நியமித்தல், பயிற்சிக்கு பொறுப்பான உதவி ஆணையாளர்கள் பயிற்சி வழங்கும் முறைமைகள் போன்ற பல்வேறு தலைப்புக்களில் பயிற்சிகள் வழங்கப்பட்டன.


















# எட்டு நிமிடங்களில் முதலாவது நபராக உலக சாதனை படைத்த முல்லை பெண்!

**(மரியசீலன் திலைக்ஸ், வடமராட்சி நிருபர்)**

57 போட்டியாளர்களில் 8 நிமிடங்களில் முதலாவது நபராக உலக சாதனை படைத்துள்ளார் முல்லைத்தீவு இளம் பெண் உமேஷன் மேரி ஜஸ்வினி.

15 நிமிடங்களில் திறமைகளை வெளிக்காட்டிய இலங்கை மகளிருக்கு திறமைக்கான விருது வழங்கும் நிகழ்வு கொழும்பில் இடம் பெற்றது.

சோழன் உலக சாதனை புத்தகத்தின் வரலாற்று பதிவாக, Cholan book of International world Record 2026 நிகழ்வில் குறுகிய நேரத்தில் தமது திறமைகளை வெளிக்காட்டிய பெண்கள் இங்கு தெரிவு செய்யப்பட்டு உலக சாதனையாளராக பிரகடனப்படுத்தப்பட்டனர்.

இந்த நிகழ்ச்சியில், அழகுசாதனப் பொருள்கள் உற்பத்தி, ஒப்பனை கலைஞர், பிசின் கலை, நகை வடிவமைப்பு, மெஹந்தி கலைஞர், கேக் வடிவமைப்பாளர் மற்றும் ஆடை வடிவமைப்பாளர் உள்ளிட்ட பல்வேறு துறைகளைச் சேர்ந்த 57 பேர்கள் பங்கேற்றனர்.

இந்த விருது வழங்கும் நிகழ்வில் தமிழகத்தின் சின்னத்திரை சங்கத்தின் உறுப்பினரும் நடிகருமான சேக் பரீத் பிரதம அதிதியாகவும், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பாரியார் ஷிரான்தி ராஜபக்ஷ,தாரகா குருகந்தா மற்றும் ருக்மல் சேனநாயக்க ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாகவும் கலந்து கொண்டார்.

nails artist கலையில் 15 நிமிடங்கள் கொடுக்கப்பட்ட போதும் 57 போட்டியாளர்களில் முதலாவதாக எட்டு நிமிடங்களில் கடமையை முடித்து முல்லைத்தீவை சேர்ந்த உமேஷன் மேரி ஜஸ்வினி என்பவர் சோழன் உலக சாதனை புத்தகத்தில் இடம்பிடித்துள்ளார்.

வழங்கப்பட்ட சிறப்புப் பணியை 8 நிமிடங்களுக்குள் வெற்றிகரமாக முடித்து உலக சாதனை படைத்து மற்றும் உலக சாதனை புத்தகத்தில் தனது பெயரை பதிவு செய்து பெருமை சேர்த்த உமேஷன் மேரி ஜஸ்வினியை தமிழ் சமூகம் பாராட்டி நிற்கின்றது.

# மாவழிப்பள்ளி மக்களுக்கு நீர்த்தாங்கிகள் வழங்கல்!




**(நூருல் ஹுதா உமர்)**

முஸ்லிம் வாலிபர் சங்க மாவடிப்பள்ளி கிளையின் அனுசரணையில் மாவடிப்பள்ளி முஸ்லிம் வாலிபர் சங்க கிளையின் போசகர் காரைதீவு பிரதேச சபை உறுப்பினர் ஏ.ஆர்.எம். ஹில்மியின் ஏற்பாட்டில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு நீர்த்தாங்கிகள் வழங்கி வைக்கப்பட்டன.

அம்பாறை மாவட்டத்தின் நீர்த்தாங்கிகள் வழங்கும் ஆரம்ப நிகழ்வு முஸ்லிம் வாலிபர் சங்க மாவடிப்பள்ளி கிளைத் தலைவரும், நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் உத்தியோகத்தருமான எம்.எம்.சர்ராஜ் தலைமையில் மாவடிப் பள்ளி ஜும்ஆப் பள்ளிவாசலில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் அகில இலங்கை முஸ்லிம் வாலிபர் சங்க பேரவையின் அம்பாறை மாவட்டப் பணிப்பாளர் சிரேஷ்ட ஊடகவியலாளர் அதிபர் எம்.ஐ.எம்.றியாஸ், பிரதம அதிதியாகவும், முஸ்லிம் வாலிபர் சங்க பாலமுனை தலைவரும் அட்டாளைச்சேனை பிரதேச சபை உறுப்பினரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான ஐ.ஏ.ஸிறாஜ் கௌரவ அதிதியாகவும் கலந்து கொண்டு பயனாளிகளிகளுக்கு நீர்த்தாங்கிகளை உத்தியோக பூர்வமாக வழங்கி வைத்தனர்.

அகில இலங்கை முஸ்லிம் வாலிபர் சங்க பேரவையின் அம்பாறை மாவட்டத்தின் விசேட செயற்றிட்டத்தின் ஊடாக இவ்வாண்டு 300 பயனாளிகளுக்கு மாவட்டத்தின் 17 முஸ்லிம் வாலிபர் சங்க கிளைகள் மூலம் இந்தத் திட்டம் செயற்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.





# திருமலையில் இடம்பெற்றது பாரம்பரிய பொங்கல் விழா!

(ஹஸ்பர் ஏ.எச்.)

திருகோணமலையில் பாரம்பரிய தைப்பொங்கல் விழா இன்று இடம் பெற்றது.

திருகோணமலை அகரம் மக்கள் கலைக் கூடம் ஏற்பாடு செய்த குறித்த பாரம்பரிய தைப்பொங்கல் நிகழ்வில் இலங்கை தமிழரசு கட்சியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

பாரம்பரிய முறைகளை எடுத்துக் காட்டும் தைப்பொங்கல் நிகழ்வின் கலை கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றன.

தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு குறித்த நிகழ்வை ஏற்பாடு செய்த ஏற்பாட்டு குழுவினர்கள் இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர்களால் நினைவுச் சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

பாரம்பரிய தைப் பொங்கல் தொடர்பிலும் நாடாளுமன்ற உறுப்பினரால் சிறப்புரை நிகழ்த்தப்பட்டது.

நிகழ்வில் அமைப்பின் உறுப்பினர்கள்,அரசஅதிகாரிகள்எனபலரும்கலந்து கொண்டனர்.









# குச்சவெளி பிரதேசத்தில் இடம்பெற்ற பொதுச் சுகாதாரக் கலந்துரையாடல்

(அபு அலா)

குச்சவெளி பிரதேச சபைக்கு உட்பட்ட மாட்டிறைச்சி மற்றும் கோழிறைச்சிக் கடை உரிமையாளர்களுக்கு பொதுச் சுகாதார நடைமுறைகள் தொடர்பான கலந்துரையாடல் இடம்பெற்றது.

குச்சவெளி பிரதேச சபை தவிசாளர் ஏ.முபாரக் தலைமையில் இடம்பெற்ற இக் கலந்துரையாடலில், குச்சவெளி பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் எஸ்.சயோலிபன் கலந்து கொண்டு பொதுச் சுகாதாரம் தொடர்பில் கடை உரிமையாளர்களுக்கு தெளிவான விளக்கங்களை வழங்கினார்.

கடை உரிமையாளர்கள் தங்களின் கடைகளை எவ்வாறு சுத்தமாக வைத்திருக்க வேண்டும் என்றும் அதன் கழிவுகளை எவ்வாறு அகற்ற வேண்டும் என்று தெளிவான விளக்கங்களை வழங்கி வைத்த அதேவேளை, விலங்கு அறுவை மனையை எவ்வாறு பராமரிக்க வேண்டும் என்றும் தெளிவுபடுத்தினார்.

குறிப்பாக, குச்சவெளி பிரதேச சபையின் உப அலுவலகங்களாக இயங்குகின்ற நிலாவெளி, புல்மோட்டை மற்றும் பிரதான அலுவலக பிரிவுகளுக்குட்பட்ட திண்மக் கழிவகற்றல் முகைமையை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் எவ்வாறு மேற்பார்வை செய்யவேண்டும் என்றும் தெளிவுபடுத்தப்பட்டது.

நிலாவெளிப் பிரதேசம் சுற்றுலாத் துறை பிரதேசமாக காணப்படுவதால் அப்பிரதேசத்தை சுத்தமாகவும், சுகாதாரமாகவும் வைத்திருப்பதோடு அழகுபடுத்தும் செயற்பாடுகளையும் முன்னெடுக்க வேண்டும் என்று தவிசாளர் ஏ.முபாரக் வேண்டிக்கொண்டார்.

இந்தக் கலந்துரையாடலில் பிரதேச சபை உறுப்பினர்களான எம்.எம். மசாஹிர், எச்.வி.சல்மான் பாரீஸ், ஜே. நிமலகாசன், பிரதேச சபை செயலாளர் டபிள்யூ.இந்திரஜீத், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், வருமானப் பரிசோதகர்கள், உள்ளூராட்சி அலுவலக ஆய்வு உத்தியோகத்தர் மற்றும் மாட்டிறைச்சி கடை உரிமையாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். இதன்போது மாட்டிறைச்சி கடை உரிமையாளர்களுக்கான அனுமதிப்பத்திரம் வழங்கி வைக்கப்பட்டது.



# ஜித்தாவுக்கான இலங்கை கவுன்சிலர் லபார் தாஹிருக்குக் கௌரவம்

(திகாமடுல்ல நிருபர்)

சவுதி அரேபியாவின் ஜித்தாவுக்கு இலங்கை கவுன்சிலர் ஜெனரலாக நியமிக்கப்பட்டுள்ள மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் ஓய்வு நிலை நீதியரசர் லபார் தாஹிர் கௌரவிக்கப்பட்டார்.

திகாமடுல்ல மீடியா போரத்தின் தலைவர், சிரேஷ்ட ஊடகவியலாளர் எம். எப்.றிபாஸ், இர்ஷாத் ஏ காதர் நற்பணி மன்றத்தின் தலைவர் மனிதநேயன் இர்ஷாத் ஏ காதர் ஆகியோர் நேற்று அவரது வாசஸ்தலத்துக்குச் சென்று அவருக்குப் பொன்னாடை போத்திக் கௌரவித்தனர்.





# தங்க முலாம் பூசப்பட்ட கலசங்களை திருடிய இரண்டு சந்தேக நபர்கள் கைது

புத்தர் சிலைகளின் நெற்றியில் இருக்கும் தங்க முலாம் பூசப்பட்ட கலசங்களைத் திருடிய இரண்டு சந்தேக நபர்களை நாவலப்பிட்டி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த கைது நடவடிக்கையானது இன்று இடம்பெற்றுள்ளது.

நாவலப்பிட்டி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஆலயங்களில் இருக்கும் புத்தர் சிலைகளின் நெற்றியில் காணப்படும் கலசங்களை இரண்டு சந்தேக நபர்களும் திருடியுள்ளனர்.

இந்த நிலையில் ஆலயத்தில் பொருத்தப்பட்ட பாதுகாப்பு கேமராவில் திருட்டு பதிவாகியுள்ளது.

இதனை அடிப்படையாகக் கொண்டு மேற்கொண்ட விசாரணையில் நாவலப்பிட்டி பொலிஸ் அதிகாரிகள் குறித்த சந்தேக நபர்களைக் கைது செய்துள்ளனர்.

கைதானவர்கள் 45-50 வயதுக்கு உட்பட்ட பிலிமதலாவ சேர்ந்தவர்களாவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

புத்தர் சிலைகளின் தலைகளை சேதப்படுத்தி இலங்கை முழுவதும் உள்ள ஆலயங்களுக்குச் சென்று கலச நினைவுச் சின்னங்களிலிருந்து பெறப்பட்டதாக சந்தேகிக்கப்படும் உருக்கிய தங்கம் ஒரு தொகையையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

குருநாகல் மற்றும் பிலிமதலாவ பகுதிகளில் தங்கப் பொருள்களை விற்பனை செய்யும் தனியார் நிறுவனத்தால் இந்த இரண்டு சந்தேக நபர்களிடமும் இருந்து பெறப்பட்ட தங்கம் உருக்கப்பட்டு விற்கப்பட்டது என்பது பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அவர்களிடமிருந்து குற்றத்துக்குப் பயன்படுத்திய ஓட்டோ ஒன்றையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடம் மேலதிக விசாரணைகள் மேற்கொண்ட பின்னர் நாவலப்பிட்டி நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

# தும்பளை புனித லூர்து அன்னை திருத்தல திருவிழா செவ்வாயன்று!

பருத்தித்துறை, தும்பளை புனித லூர்து அன்னை திருத்தல திருவிழாவில் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளது.

அன்று மாலை திவ்விய நற்கருணை விழாத்திருப்பலி, ஆராதனை, பவனி என்பன யாழ். மறைமாவட்ட குரு முதல்வர் அருட்கலாநிதி பி. ஜெ. ஜெபரட்னம் அடிகளார் தலைமையில் இடம்பெறவுள்ளன.

11 ஆம் திகதி புதன்கிழமை காலை 5.30 மணிக்கும், 7 மணிக்கும் திருவிழாத் திருப்பலிகள் ஒப்புக் கொடுக்கப்படும்.

திருவிழாத் திருப்பலியை யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட் திரு ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமை தாங்கி ஒப்புக் கொடுப்பார். திருப்பலியின் நிறைவில் புனித லூர்து அன்னையின் திருச்சொருபப் பவனியும் ஆசீரும் இடம்பெறும்.

# மலையக ரயில் சேவைகள் இன்மையால் மாணவர் அவதி

(மஸ்கெலியா நிருபர்)

டித்வா புயலின் பின்னர் மலையக மார்க்கத்தில் ரயில் சேவைகள் தடைப்பட்டுள்ளன. இதன் காரணமாக வட்டகொட, கிரேட் வெஸ்டர்ன், உடரதல்ல நானுஓயா பகுதிகளில் உள்ள பாடசாலை மாணவர்கள் தாங்கள் செல்லும் பாடசாலைகளுக்கு முறையாக செல்ல முடியாது உள்ளது எனத் தெரிவிக்கின்றனர்.

அந்தப் பகுதியில் முறையாக அரச பஸ்களும் சேவைகள் இல்லை.

குறித்த பகுதிக்கு அரச பஸ் சேவைகள் நடத்த வேண்டும் என கோரிக்கை முன்வைத்து பல தடவைகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அறியத் தந்தும் இன்னும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கின்றனர்.

இது குறித்துச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.



- வி.ஜெனார்த்தன் -

# பூவுலகத்துக்கு கற்பகதரு பனை...!

பனைமரம் கிராமப் புறங்களில் கலாச்சாரத்தோடும் நாட்டின் பொருளாதாரத்தோடும் தலைமுறை தலைமுறையாக பின்னிப் பிணைந்துள்ளது. இதனாலேயே தேவலோகத்து கற்பக தரு போல பூவுலகத்துக்குக் கற்பகதரு என அழைக்கப்படுகின்றது.

சங்ககாலம் முதல் தமிழர் வாழ்வில் பனைமரம் ஓர் அங்கமாக விளங்கி இருக்கிறது. ஈழம் என்ற பெயரும் பனையை அடிப்படையாகக் கொண்டு தோன்றியது என்ற கருத்து உண்டு. ஆகவே அன்று முதல் இன்றுவரை எம் வாழ்வியலோடு நெருங்கிய தொடர்பு கொண்டதாக விளங்கிய பனையின் பெருமையை நோக்கின் அச்சு இயந்திரம் வருவதற்கு முன் ஓலைச்சுவடியில் தவழ்ந்து தமிழை சுமந்த பெருமை பனைக்கு உரியது.

உலகம் போற்றும் உன்னத நூல்களான திருக்குறள், தொல்காப்பியம், சிலப்பதிகாரம் உள்ளிட்ட அனைத்து தமிழ் இலக்கியங்களையும் பத்திரமாக புதிய தலைமுறைக்கு கிடைக்க செய்த பெருமை பனை ஓலையே சாரும்.

இந்தப் பனை ஏடகம், கற்பக தரு, கரும்புறம், தருமவிசாரம், காமபுரம், தாலம், தாளி, துருமேக நீலம், பாரி பத்திரம், பார்பதம் புற்பதி, புள்தூதியம், போத்து,போந்தை என்று பல பெயர்கள் கொண்டு அழைக்கப்படுகின்றது.

சாதாரணமாக பனை கிளையற்ற ஒற்றை தடிமரமாக வளர்வதை நாம் அறிவோம். ஆனால் அபூர்வமாக கிளைகளுடன் கூடிய பனைமரம் மட்டக்களப்பு கோட்டை பகுதியில் அரசின் மாவட்ட தலைமை அலுவலகத்துக்கு அண்மையில் உள்ளதை காணலாம். இன்னும் கிளைப் பனை மரங்கள் வட மாகாணத்தில் பருத்தித்துறை வல்லிபுர ஆழ்வார் கோயிலுக்கு அருகாமையில் இரு இடங்களில் உள்ளன. இவ்வாறாக கிளைப் பனை மரங்கள் வெளிநாட்டிலிருந்து கொண்டு வந்திருக்கலாம் என நம்பப்படுகின்றது. போலந்து அல்லது பிரித்தானிய நாட்டு கிறிஸ்தவ சமய பரப்பாளர்களால் பிரித்தானிய ஆட்சி காலத்தில் இவ்வாறான கிளைப் பனைகள் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கலாம் என கூறப்படுகின்றது.

பனை மரம் தமிழர்களின் மரம் என்று கூறுவது நமது பெருமை என்றும் கூற முடியும். சுருக்கமாக பனை நம்மை உருவாக்கியது. நம் பண்பாட்டை வளர்த்தெடுத்தது என்று கூறலாம். நினைப்பதை கொடுக்கும் கற்பக விருட்சமாக பனை தழைத்து நின்று இருக்கின்றது. வெயில் என்றும் பாராமல் மழை என்றும் பாராமல் ஒற்றைக்கால் தவம் இருந்து மக்களை பேணிப் பாதுகாத்திருக்கின்றது. இப்படி உறவாடிய பனை மரத்தை நம் மூதாதையர்கள் தங்கள் மரமாக பாதுகாத்து தந்துள்ளனர் என்று கூறுவது பொருத்தமானதாகும். பண்பாட்டு நிலை நின்று நோக்குகின்ற போது தாயாக வந்த மரம் என்று கூறப்படுகின்றது.

அதாவது குழந்தைகள் முதல் பெரியோர்கள் வரை ஆண்கள் பெண்கள் வேறுபாடு இன்றி பனையோடு நெருங்கிய உறவாடியவர்கள் நம் மக்கள். மறத்தமிழச்சி பனை முறம் கொண்டு புலியை விரட்டியதை பண்டைய இலக்கியம் வியந்து பேசுகின்றது.

சிறார்கள் வாழ்க்கையில் விளையாடி கழித்த மரங்களில் பனை போல் மற்றொரு மரம் இருக்குமா? பனை மரத்தை தாயாக உருவகிக்கும் வழக்கம் தென் தமிழகத்தில் உள்ளது. அந்தத் தாய் தெய்வத் தன்மை கொண்டவளாய் புரிந்து கொள்ளப்பட்டிருக்கின்றாள். கட்டுக்கடங்காத உடல் கொண்டவள், பாலாறும் களிவு கொண்டவள், அரம்வாள் எனப்படும் கருக்கை (மட்டையின் இரு புறம் கூர்மையாக இருக்கும் பகுதி) கொண்டவள், காற்றிலே பேயாட்டம் ஆடுபவள், எந்தெந்த துன்பத்திலும் சாய்ந்து விடாதவள், ஏதாவது

தொடர்ச்சி▼

# பூவுலகத்துக்கு கற்பகதரு பனை...!

தொடர்ச்சி▲

ஒரு உணவை அளித்து பிள்ளைகளை காப்பவள் என பனை ஆதி வடிவமாக திகழ்கின்றது.

பனையேறிகள் இதனை காளி என அழைக்கின்றனர். கேட்டதை கொடுக்கும் கற்பக மரம், பஞ்சம் போக்கி, காளித்தாய் என காலத்துக்கு ஏற்பவும் சூழலுக்கு ஏற்பவும் பனை பல பெயர்களைப் பெற்றிருக்கின்றது. பனை ஒரு ஒப்புவமை அற்ற மரம். மக்களின் வாழ்வாதாரம் உணவு கலை பண்பாடு வரலாறு பொருளியல் முழுவதும் பனை விரவிக் கிடக்கின்றது.

தமிழ் மக்களின் வாழ்வியலோடு பனையும் பனம் பொருள்களும் இரண்டறக் கலந்து இருந்தமைக்கான சான்றுகள் பல உள்ளன. தமிழ் மக்களின் வாழ்வியலை நன்கு அறிய உதவும் சிறந்த ஆதாரங்களாக, இலக்கியம் இலக்கணம் முதலானவற்றில் பனை பற்றியும் பனம் பண்டங்கள் பற்றியும் பல செய்திகள் இடம் பெற்றுள்ளன.

பொருளியல் அம்சங்களுக்கு இயைவுபட்டு வாழ்வியல் அமைவது தவிர்க்க முடியாதது. அந்த வகையிலே பெரும்பான்மையாக தமிழர் வாழ்ந்த, வாழும் நிலப்பரப்பில் புவியியல் அமைப்பிலே தானாகவே வளர்ந்தும் பயன் தரக்கூடிய தாவரமாக பனை காணப்பட்டது. இதனை நட்டு நீரூற்றி பாதுகாக்க வேண்டிய தேவை இன்றியும் காணப்பட்டது.

இதனாலேயே தமிழ் மக்களின் வாழ்வியலோடு பனை ஒன்று இருந்ததில் ஆச்சரியம் இல்லை. பிறர் உதவி இன்றி தன் முயற்சியால் வாழ்வதோடு பிறருக்கு பெரு நன்மை புரிவதைப் பனைக்கு நிகராகவே கருதினர். எனவேதான் “மங்கை நல்லார்க்கு பானையின் ஓலையை தாலியாக்கி” என்றும் ‘தழைத்து வாழ்வாயாக” என்றும் வாழ்த்தி வாழ்வில் பிணைந்து விட்டனர்.

தமிழ் மக்களை பொறுத்தவரையில் தாலி என்பது மக்களின் பாரம்பரியத்தோடும் தமிழ் கலாச்சாரத்தோடும் வாழ்வியலோடு இணைந்ததாக அமைகின்றது. முன்னைய காலங்களில் பனை ஓலையில் செய்யப்பட்ட ஆபரணங்கள் அணியப்பட்டன என்று வரலாற்று குறிப்புகள் காணப்படுகின்றது. அத்தோடு மொழி நிலையாக பயிலப்பட்டு வருகின்ற சொல்லாடல்கள் பழமொழிகளிலிருந்து இதனை அறிய முடிகின்றது. தாலி, காதோலை போன்ற ஆபரணங்கள் பனை ஓலையால் செய்யப்பட்டுள்ளன. பழந்தமிழ் வாழ்விலே பனை உணவு நிலையில் மக்களுக்கு உதவி புரிந்துள்ளமையைப் புலவர்கள் பலவாறு எடுத்தியம்பி உள்ளனர்.

பதிற்றுப்பத்தில் வரும் விருந்தினர்களுக்கு கள்ளும் சோறும் அளித்து உபசரிப்பதை விரிவாக பேசியுள்ளது. சேரனது கொடை சிறப்பு பற்றி பாடும் புலவர் உணவு நிலையில் கள் அருந்தியதை முக்கியத்துவப்படுத்துகின்றார்கள். பனங்காய்க்கும் தமிழர்களுக்கும் இரத்தமும் சதையுமான ஒரு பிணைப்புள்ளது. முன்னைய காலத்தில் ஊரவர் பெயருடன் “பனங்காய் செல்லர், பனங்காய் பொன்னம்மா” என பல பெயர்கள் ஊரில் வழக்கத்தில் இருக்கும். பனங்காய்களை பொறுக்கி எடுத்து சேகரிப்பதில் முன்னணிவகித்தவர்களுக்கே இவ்விதம் பெயர் சூட்டி இருந்தார்கள்.

பனம்பழம் விழ விழ பொறுக்கி சேகரிப்பதில் கஷ்டம் இருந்ததால் பனங்காய் நன்கு முற்றி வரும் போது வெட்டி வீழ்த்தி அவற்றை கடகங்களில் அள்ளிச் செல்வார்கள். அதிகமானால் மாட்டு வண்டியில் ஏற்றுவார்கள். பின்னரான காலங்களில் இயந்திர வாகனங்களில் ஏற்றி சென்றனர். பனம் பழங்களை பொறுக்கி சுமந்து வளவில் போட்டு பின்பு களியில் கோதுமை மா போட்டுப் பிசைந்து பலகாரங்களை செய்வார்கள்.

பனங்கொட்டையை பாத்தி போட்டு பனங்கிழங்கை உண்டாக்கச் செய்வார்கள். இதன் பின்னர் வரும் ஊமல்கொட்டை எடுத்து அடுப்பு எரிக்க பயன்படுத்துவர். புகையிலையை பயன்படுத்துவோர் இந்த ஊமல்கொட்டை அதிகம் பயன்படுத்துவார்கள். ஒடியல் பிட்டு சாப்பிட்ட பின் ஓட்டமும் நடயுமாக பாடசாலை சென்ற அனுபவத்தை இப்போது பெருமையுடன் கூறும் உயர் அதிகாரிகளும் உள்ளனர்.

அம்மா பெட்டி, பாய் இழைத்து தான் என்னை படிப்பித்தவர். அப்பா கள்ளுச்சீவி வித்துத்தான் நான் படித்தேன் என பல பெரிய பதவிகளை அலங்கரித்த பலரும் கூறிய காலம் இருக்கிறது. சீவல் பயன்பாடு முதல் தும்பு உற்பத்திவரை வற்றாத புதையலாக பனை திகழ்கின்றது. பனை தமிழ் பேசும் மக்கள் வாழும் பிரதேசங்களில் செழித்து இருந்ததன் காரணமாகப் பனை அவிருத்தி என்பது இலங்கை அரசால் ஓரங் கட்டப்பட்ட காலம் உண்டு.


ஆனால் அந்த நிலை இன்று மாற்றமடைந்து இலங்கை அரசால் பனை அபிவிருத்திச் சபை, பனை ஆராய்ச்சி நிறுவனம் போன்ற பல அமைப்புகள் இந்த வளத்தைப் பேணி நாட்டின் பொருளாதார உற்பத்தி செயற்பாடுகளை தற்போது மேற்கொண்டுவருகின்றன.



# சீனா, பாகிஸ்தானுக்கு அதிர்ச்சி அளித்துள்ளது அமெரிக்காவின் வர்த்தக ஒப்பந்த வரைபடம்!

## இந்திய ஊடகங்கள் செய்தி வெளியீடு






வர்த்தக ஒப்பந்தம் தொடர்பாக அமெரிக்கா வெளியிட்ட இந்திய வரைபடம் சீனா மற்றும் பாகிஸ்தானுக்கு அதிர்ச்சி அளிக்கும் வகையில் அமைந்துள்ளது என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, இந்தியா – அமெரிக்கா இடையேயான இடைக்கால வர்த்தக ஒப்பந்தத்தை இரு நாடுகளும் ஏற்றுக்கொண்டதை அடுத்து, இது தொடர்பான கூட்டறிக்கையை வெள்ளைமாளிகை வெளியிட்டது.

இந்தியா வரிக்குறைப்பு செய்ய இருக்கும் பொருள்கள் தொடர்பான பட்டியலுடன் நம் நாட்டின் வரைபடமும் அந்த அறிவிப்பில் இடம் பெற்றுள்ளது.

உத்தியோக பூர்வமாக, வெளியிடப்பட்டுள்ள இந்த விளக்கப் படத்தில், ஜம்மு காஷ்மீர் முழுவதையும் இந்தியாவின் ஒரு பகுதியாக அமெரிக்கா காட்டியுள்ளது.

இதன்படி பாகிஸ்தானின் ஆளுகைக்கு உட்பட்ட காஷ்மீரும், இந்தியப் பகுதியாகக் காட்டப்பட்டுள்ளது.

முன்னதாக, ஜம்மு–காஷ்மீர் விவகாரம் தொடர்பாக, பாகிஸ்தான் பிரதமர் ஷபாஸ் ஷெரீப், இராணுவ தளபதி ஆசிம் முனீர் ஆகியோர் வொஷிங்டனுக்கு பல முறை பயணம் செய்து அமெரிக்காவின் ஆதரவைப்பெற முயற்சி செய்தனர்.

அத்துடன், சர்வதேச அளவில் காஷ்மீர் பிரச்சினையை எழுப்ப பாகிஸ்தான் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

இந்த நிலையிலேயே, அமெரிக்கா வெளியிட்டுள்ள புதிய வரைபடத்தில் பாகிஸ்தானின் ஆளுகைக்கு உட்பட்ட காஷ்மீர் இந்தியாவின் ஒரு பகுதியாகக் காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, சீனாவின் வசம் உள்ள அக்சய் சின் பகுதியும் இந்திய நிலப்பரப்பாக, குறித்த வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில், இந்திய – அமெரிக்க வர்த்த ஒப்பந்தத்தை விளக்கும் கிராஃபிக்கல் ரெப்ரசன்டேஷன்களில் இந்தியாவின் வரைபடம் இந்தியா விரும்பும்படி அமைந்துள்ளது.

ஒருவேளை இந்தமுறை அமெரிக்கா தெரிந்தே இந்த வரைபடத்தைப் பயன்படுத்தி இருக்குமேயானால், இது இந்திய நிலைப்பாட்டில் அமெரிக்கா ஒத்துப்போகிறது என்பதை தெளிவாக பாகிஸ்தான், சீனாவுக்கு உணர்த்தும் சமிக்ஞை என்று நிபுணர்கள் கருதுகின்றனர்.– என்றுள்ளது.

# மக்கள் தலைகளில் கடன் சுமையை ஏற்றிய ஸ்டாலின் அரசின் சாதனை!

## எடப்பாடி பழனிசாமி தெரிவிப்பு



கடந்த 2021 ஆம் ஆண்டு முதல்வராக பொறுப்பேற்ற ஸ்டாலின், இதுவரை 5 லட்சம் கோடி ரூபா கடன் வாங்கியுள்ளார் என்று அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் அந்தக் கட்சியின் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி கலந்து கொண்டு பேசிய போது இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

அ.தி.மு.க. வலுமையான இயக்கமாக உள்ளது. டெல்டா மாவட்டம் விவசாயிகள் நிறைந்த மாவட்டம். டெல்டா மாவட்ட விவசாயிகள் பல்வேறு இயற்கை சீற்றங்களால் சோதனைகளைச் சந்தித்து கொண்டிருக்கிறார்கள்.

அப்படி சோதனை வரும் போதெல்லாம் விவசாயிகளுக்கு நேசகரம் நீட்டிய இயக்கம் அதிமுக அரசு. விவசாயிகள் துன்பத்தில் இருக்கும்போது தானாக முன்வந்து உதவி செய்யும் அரசு அதிமுக அரசு. துணை முதல்வராக ஸ்டாலின் இருந்தபோது, ஹைட்ரோகார்பன், மீத்தேன் திட்டத்துக்குப் புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்டது. அப்போது விவசாயிகள் பதறிப் போயிருந்தனர்.

நிலங்களை காக்க வேண்டும் என்று விவசாயிகள், விவசாய சங்கத்தினர் என்னிடம் கோரிக்கை வைத்தனர். அதன் பிறகு மத்திய அரசிடம் பேசி, டெல்டா மாவட்டங்களைப் பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக சட்டரீதியாக அறிவித்தோம்.

அதிமுக என்றால் அது மக்களின் இயக்கம். திமுக குடும்ப இயக்கம். எவ்வளவு சோதனைகளை நாம் சந்தித்தோம். எம்.ஜி.ஆர்., கட்சி தொடங்கிய காலத்திலிருந்து இன்றுவரை அ.தி.மு.க., பல்வேறு சோதனைகளை சந்தித்து வருகிறது.

எந்த அரசுக்கும் வராத சோதனைகளைச் சந்தித்த போதிலும், பல்வேறு சாதனைகளைப் படைத்த போதிலும், கடந்த 2021 ஆம் ஆண்டில் 5 லட்சத்து 18 ஆயிரம் கோடி ரூபாதான் கடன் இருந்தது.


அரசுக்கு ஒரு ஆண்டு எந்த வருமானமும் இல்லை. கொரோனா காலத்தில் அரசுக்கு 40 ஆயிரம் கோடி ரூபா செலவு ஏற்பட்டது. இவ்வாறான சூழலிலும் சிறப்பான ஆட்சியை அ.தி.மு.க. அரசு வழங்கியது.

2021ஆம்ஆண்டுமுதல்வராகபொறுப்பேற்ற ஸ்டாலின், இதுவரை 5 லட்சம் கோடி ரூபா கடன் வாங்கியுள்ளார். மக்களின் தலைகளில் கடனை சுமத்தியது தான் ஸ்டாலின் அரசின் சாதனை. வேறு எந்த சாதனையும் செய்யவில்லை.– என்றார்.

### அணுசக்தி புதிய ஒப்பந்தத்துக்கு

# ஈரான் சம்மதிக்காவிட்டால் விளைவு கடுமையாக இருக்கும்!

## ட்ரம்பின் அதிரடி போர் மிரட்டல்




அணுசக்தித் திட்டத்துக்கான புதிய ஒப்பந்தத்துக்கு ஈரான் சம்மதிக்காவிட்டால், அதன் விளைவுகள் மிகவும் கடுமையாக இருக்கும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

மேற்காசிய நாடான ஈரானுடன், 2015 இல் கையெழுத்தான அணுசக்தி ஒப்பந்தத்திலிருந்து, 2018 இல் அமெரிக்கா விலகியது.

இதைத் தொடர்ந்து ஈரானுக்கு எதிராகப் பொருளாதாரத் தடை மற்றும் அணு ஆயுதம் தயாரிப்பதாகத் தெரிவித்துத் தாக்குதல் போன்ற நடவடிக்கைகளில் அமெரிக்கா ஈடுபட்டது.

இந்த நிலையில், அணுசக்தி தொடர்பான ஒப்பந்தத்தில் கையெழுத்திடும்படி, ஈரானுக்கு அமெரிக்கா நெருக்கடி கொடுத்தது.

இதன்படி, மேற்காசிய நாடான ஓமன் தலைநகர் மஸ்கட்டில் பேச்சு வார்த்தை நடைபெற்றுள்ளது.

இது நேரடியாக இல்லாமல், ஓமன் வெளியுறவுத் துறை அமைச்சர் சயீத் பத்தர் பின் ஹமத் அல் புசைதியுடன், அமெரிக்க மற்றும் ஈரான் பிரதிநிதிகள் தனித்தனியாகப் பேச்சு நடத்தினர்.

இது குறித்துத் தற்போது கருத்துத் தெரிவித்துள்ள ட்ரம்ப்,

"புதிதாக ஒரு ஒப்பந்தத்தை எட்ட வேண்டிய கட்டாயத்தில் ஈரான் உள்ளது. இந்த ஒப்பந்தத்துக்குச் சம்மதிக்காவிட்டால் அதன் விளைவுகள் மிகவும் கடுமையாக இருக்கும் என்பது ஈரானுக்குத் தெரியும்.

கடந்தாண்டு ஜூனில், ஈரானின் அணுசக்தித் தளங்கள் மீது அமெரிக்கா நடத்திய தாக்குதலை விட இது மிகக் கடுமையானதாக இருக்கும்.

தற்போது, அமெரிக்காவின் பிரமாண்டக் கடற்படை ஈரானை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது.

ஈரான் சரியான முடிவை எடுக்காவிட்டால், இராணுவத் தாக்குதல் நடத்தத் தயங்க மாட்டோம்" – எனத் அவர் தெரிவித்துள்ளார்.

# ரஷ்ய அரச பல்கலையில் கத்திக் குத்து எட்டுப் பேர் ஆஸ்பத்திரியில் அனுமதி!



ரஷ்யாவில் இந்தியர் உள்பட எட்டுப் பேர், கத்திக் குத்துத் தாக்குதலுக்கு ஆளாகியுள்ளனர்.

இந்த தாக்குதல் சம்பவம் குறித்து ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

ரஷ்யாவின் பேஷ்கோர்டோஸ்டான் குடியரசில் உள்ள அஃபா பகுதியில் அமைந்துள்ள அரச மருத்துவப் பல்கலைக்கழக வளாகத்துக்குள் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருகையில்,

இந்தப் பல்கலைக்கழகத்திற்குள் நுழைந்த சந்தேக நபர், தம்மிடமிருந்த கத்தியால் அங்கிருந்த மாணவர்களைத் தாக்கியுள்ளார்.

தகவலறிந்து சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் அந்தச் சந்தேக நபரரைப் பிடிக்க முற்பட்ட போது அவர்களையும் அவர் தாக்கியுள்ளார்.

இதையடுத்து, சந்தேக நபர் கத்தியால் தன் உடலைத் தானே கிழித்துக் கொண்டார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதையடுத்து, அவரை மடக்கி பிடித்த பொலிஸார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்துள்ளனர்.

உடலில் பல இடங்களில் வெட்டுக் காயம் ஏற்பட்டு ஆபத்தான நிலையில் உள்ள அவருக்கு தீவிர சிகிச்சையளிக்கப்பட்டு வருவகிறது என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக வழக்குப் பதிந்த பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்தச் சந்தேக நபர் எதற்காக மாணவர்களைக் குறிவைத்து கொலைவெறித் தாக்குதலில் ஈடுபட்டார் என்ற கோணத்தில் விசாரணைகள் முன்னெடுக்கப் பட்டுள்ளன.

கனடா முரசு
ஞாயிற்றுக்கிழமை 08/02/2026

அணு ஆயுதங்களை கனடா தயாரிக்காது



C2▶




# கனடாவின் சில நகரங்களில் செயற்படும் அமெ. குடியேற்ற, சுங்க அலுவலகங்கள்!

## அதிகாரங்கள், வரம்புகள் குறித்து கிளம்பும் கேள்விகள்

அமெரிக்காவின் குடியேற்ற மற்றும்சுங்கஅமலாக்கஅமைப்பான (ICE – Immigration and Customs Enforcement) அலுவலகங்கள் கனடாவின் சில நகரங்களில் செயல்பட்டு வருகின்றன எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இவ்வமைப்பு கனடாவில் செயல்படும் விதம், அதன் அதிகாரம் மற்றும் அதன் வரம்புகள் குறித்துப் பலரிடமும் கேள்விகள் எழுந்துள்ளன.

ICE என்பது அமெரிக்க கூட்டாட்சிசட்டஅமலாக்கஅமைப்பு. இது முக்கியமாக குடியேற்ற சட்ட மீறல்கள் மற்றும் எல்லை தொடர்பான

C2▶

# கனடா வரும் சர்வதேச மாணவர்களுக்கு புதிய கல்வி அனுமதி விதிகள் அறிவிப்பு

கனடா அரசு, சர்வதேச மாணவர்களுக்கான Study Permit விதிகளில் முக்கிய மாற்றங்களை அறிவித்துள்ளது.

Joint Programmes-இல் சேரும் மாணவர்கள் இனி பல்வேறு மாநிலங்களிலிருந்து தனித்தனியாக Attestation Letter பெற வேண்டியதில்லை. ஒரே Provincial Attestation Letter போதுமானதாக இருக்கும் என Immigration> Refugees and Citizenship Canada (IRCC) தெரிவித்துள்ளது




இதனால், பல கல்வி நிறுவனங்கள் அல்லது மாநிலங்களில் படிக்கும் மாணவர்களுக்கு விண்ணப்ப செயல்முறை எளிதாகும்.

மேலும், ஆயளவநச’ள மற்றும் ஹுழஉவழசயட படிப்புகளில் சேரும் மாணவர்கள், அவர்கள் பொது நிறுவனங்களில் (Public Institutions) படிப்பவர்களாக இருந்தால், Attestation Letter-இல் இருந்து விலக்கு பெறுவார்கள்.

ஆனால், Visiting Students மற்றும் Graduate Visitors இன்னும் Attestation Letter சமர்ப்பிக்க வேண்டும்.

கியூபெக் மாநிலத்தில் Vocational Programmes-க்கு சில விலக்குகள் வழங்கப்பட்டுள்ளன. ஆனால், CEGEP Institutions-இல் படிக்கும்

C2▶

# அணு ஆயுதங்களை கனடா தயாரிக்காது



கனடாவிற்கு அணு ஆயுதங்களை உருவாக்கும் திட்டம் எதுவும் இல்லை என்று பாதுகாப்புத் துறை அமைச்சர் டேவிட் மெக்யூன்டி தெரிவித்துள்ளார்.

உலகளவில் பல நாடுகள் அணு ஆயுதங்களை அதிகரிக்கும் சூழலில், கனடா தனது நிலைப்பாட்டை தெளிவாக வெளிப்படுத்தியுள்ளது.

"கனடா, அணு ஆயுதங்களை உருவாக்கும் அல்லது வைத்திருக்கும் எந்தத் திட்டத்திலும் ஈடுபடவில்லை. நாங்கள் அணு ஆயுத பரவலைத் தடுக்கும் சர்வதேச ஒப்பந்தங்களுடன் உறுதியாக இணைந்துள்ளோம்" என டேவிட் மெக்யூன்டி கூறியுள்ளார்.

கனடா, யேவுமு கூட்டணியின் உறுப்பினராக இருந்தாலும், தனது பாதுகாப்பு கொள்கையில் அணு ஆயுதங்களை தவிர்த்து, பாரம்பரிய பாதுகாப்பு முறைகளில் கவனம் செலுத்துகிறது.

மேலும், கனடா, அணு ஆயுத பரவலைத் தடுக்கும் ஒப்பந்தம் மற்றும் அணு ஆயுதங்களைத் தடை செய்யும் சர்வதேச முயற்சிகள் ஆகியவற்றுக்கு ஆதரவு அளித்து வருகிறது.

மேலும் "கனடாவுக்க்ஜ், அணு ஆயுதங்களை உருவாக்கும் நாடுகளுடன் போட்டியிடும் எண்ணம் எதுவும் இல்லை. எங்கள் நோக்கம், சமாதானம், பாதுகாப்பு மற்றும் சர்வதேச ஒத்துழைப்பை வலுப்படுத்துவதே" என மெக்யூன்டி தெரிவித்தார்.

இந்த அறிவிப்பு, உலகளவில் அணு ஆயுத அபாயம் அதிகரிக்கும் சூழலில், கனடாவின் சமாதான நிலைப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்துகிறது.

---

**கனடாவின் சில...**

**(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)**

குற்றச்செயல்களை விசாரிப்பதற்கும், அமெரிக்காவில் சட்டவிரோதமாக உள்ளவர்களைக் கண்காணிப்பதற்கும் பயன்படுத்தப்படுகிறது.

அதிகாரப்பூர்வ தகவலின்படி, ICE அலுவலகங்கள் கனடாவின் பல முக்கிய நகரங்களில் உள்ளன. அவை அமெரிக்க மற்றும் கனடிய அதிகாரிகளுக்கிடையிலான ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்காக செயல்படுகின்றன. இவ்வலுவலகங்களில் பணிபுரியும் அதிகாரிகள் பொதுவாக தகவல் பரிமாற்றம், விசாரணை ஒத்துழைப்பு மற்றும் எல்லைப் பாதுகாப்புத் தொடர்பான பணிகளில் ஈடுபடுகின்றனர்.

ஆனால், ஐஊநு அதிகாரிகள் கனடாவில் தாங்களாகவே கைது செய்ய முடியாது. கனடாவில் சட்ட அமலாக்க அதிகாரம் கனடிய காவல் மற்றும் எல்லைப் பாதுகாப்பு அமைப்புகளுக்கே சொந்தமானது. எனவே ICE அதிகாரிகள் கனடாவில் செயல்படும் போது, அவர்கள் கனடிய அதிகாரிகளுடன் இணைந்து செயல்பட வேண்டியது அவசியமாகும்.

சில மனித உரிமை அமைப்புகள், ICE மற்றும் கனடிய அமைப்புகளுக்கிடையிலான ஒத்துழைப்பு குடியேற்றர்களின் பாதுகாப்பு மற்றும் உரிமைகள் குறித்து கவலை எழுப்புகின்றது என்று தெரிவித்துள்ளன. மற்றொரு பக்கம், அரசாங்க மற்றும் பாதுகாப்பு வட்டாரங்கள் இந்த ஒத்துழைப்பு எல்லை பாதுகாப்பு மற்றும் சர்வதேச குற்றங்களை தடுப்பதற்கு உதவுகிறது என்று கூறுகின்றன.

ICE அலுவலகங்கள் இருப்பது மற்றும் அவற்றின் பங்கு குறித்து பொதுமக்களிடையே தொடர்ந்து விவாதம் நிலவி வருகிறது.

**கனடா வரும்...**

**(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)**

மாணவர்கள் Attestation Letter சமர்ப்பிக்க வேண்டிய கட்டாயம் நீடிக்கிறது.

அதே நேரத்தில், கனடா அரசு Study Permit Caps-ஐ அறிமுகப்படுத்தியுள்ளது. 2026-இல் சர்வதேச மாணவர் சேர்க்கை இலக்கு 155,000-ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது 2025-இல் இருந்த 305,900 இலக்கிலிருந்து குறைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம், வீட்டு வசதி மற்றும் சமூக சேவைகளின் அழுத்தத்தை குறைப்பதே அரசின் நோக்கமாகும்.

இந்த புதிய விதிகள், சில மாணவர்களுக்கு விண்ணப்ப செயல்முறையை எளிதாக்கும் நிலையில் இருந்தாலும், மாணவர் சேர்க்கை எண்ணிக்கையை கட்டுப்படுத்தும் வகையில் உள்ளது என்பது கவனிக்கத் தக்கது.



# நகைக் கடையைக் கொள்ளையிட முயன்ற நால்வரைத் தேடும் ஹமில்டன் பொலிஸார்

கனடாவின் ஹமில்டன் நகரப் பகுதியில் உள்ள ஒரு மோலில் (அங்காடிக் கடைகளின் தொகுதியில்) கடந்த புதன் கிழமை பிற்பகல் நகைக் கடையை கொள்ளையிட முயன்றவர்கள் எனக் கூறப்படும் பல சந்தேக நபர்களை ஹமில்டன் பொலிஸார் தீவிரமாகத் தேடி வருகின்றனர்.

ஈஸ்ட்கேட் மோலில் உள்ள நகைக் கடைகளில் பொலிஸார் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்த நேரத்தில், சுமார் நான்கு ஆண் சந்தேக நபர்கள் அங்கு வந்துள்ளனர்.

அவர்கள் கையில் சுத்தியல் மற்றும் க்ரோபார் போன்ற கருவிகள் இருந்தன எனக் கூறப்படுகிறது.

சந்தேக நபர்களின் முகங்கள் முழுவதுமாக மறைக்கப்பட்டிருந்தன எனவும், பொலிஸ் அதிகாரிகள் மற்றும் மோலின் பாதுகாப்பு பணியாளர்களைக் கண்டதும், அவர்கள் உடனடியாக அங்கிருந்து கறுப்பு நிற செடான் காரில் தப்பிச் சென்றனர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த குழு, நகைக் கடையில் கண்ணாடியை உடைத்து வேகமாகக் கொள்ளையிட்டுச் செல்லத் திட்டமிட்டிருந்ததாக பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பாக தகவல்கள் தெரிந்தவர்கள் அல்லது சம்பவம் தொடர்பான வீடியோ/ஃசி.சி.டி.வி காட்சிகள் உள்ளவர்கள், ஹமில்டன் பொலிஸாரைத் தொடர் கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது.

இதே சமயம் கடந்த ஞாயிற்றுக் கிழமை மாலை 5 மணிக்குச் சற்று முன்பு ஹமில்டன் மலையில், 1119 ஃபென்னல் அவென்யூவில் உள்ள வணிக இடத்தில் கேஷ் ஃபார் கோல்ட் (காசுக்கு தங்கம் வாங்கும்) கடை கொள்ளையடிக்கப்பட்டதை அடுத்து, ஹமில்டன் பொலிஸார் நான்கு சந்தேக நபர்களைத் தேடி வருகின்றனர்.

துப்பாக்கி மற்றும் கம்பிகளுடன் ஆயுதம் ஏந்திய மூன்று சந்தேக நபர்கள் பின் கதவுகள் வழியாக கடைக்குள் நுழைந்தனர் எனவும், நான்காவது சந்தேக நபர் தப்பிச் செல்லும் வாகனத்தில் காத்திருந்தார் எனவும் புலனாய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

“சந்தேக நபர்கள் தங்கம், வெள்ளி மற்றும் பணத்தை குறிவைத்துச் சூறையாடிய பின்னர், அடர் நிற SUVயில் அதிவேகத்தில் தப்பிச் சென்றனர்” என்று பொலிஸ் செய்திக்குறிப்பில் விளக்கப்பட்டுள்ளது.

அந்த நேரத்தில் கடையில் ஒரு ஊழியர் இருந்தார், ஆனால் யாருக்கும் காயம் ஏற்படவில்லை.

இந்தச் சம்பவத்திலும் சந்தேக நபர்களை அடையாளம் காண பொது மக்களின் உதவியை பொலிஸார் இப்போது நாடுகின்றனர்.

# ட்ரூடோ - கேற்றி பெர்ரி ஜோடி தொடர்பில் வெளியாகிவரும் போலிப் புகைப்படங்கள்




கனடா முன்னாள் பிரதமரான ஜஸ்டின் ட்ரூடோ மற்றும் அவரது புதிய காதலியான பிரபல அமெரிக்கப் பாடகி கேற்றி பெர்ரி ஜோடியின் படங்கள் சமீபத்தில் சில ஊடகங்களிலும் சமூக ஊடகங்களிலும் வெளியாகின.

ஒரு நிகழ்ச்சி விடாமல் எல்லா நிகழ்ச்சிகளிலும் அவர்கள் இருவரும் இணைந்து ஜோடியாக பங்கேற்பது போல் ஒரு தோற்றம் முன்வைக்கப்பட்டு வருகிறது.

சமீபத்தில், இசைக்கலைஞர்களை கௌரவிக்கும் கிராமி விருது வழங்கும் நிகழ்ச்சியில் ட்ரூடோவும் பெர்ரியும் கலந்து கொண்டமையைக் காட்டும் படங்கள் வெளியாகின.

இருவரும் ‘மேட்சிங்காக’ கருப்பு நிற உடை அணிந்து ஜோடியாக நிற்கும் படங்கள் ஊடகங்களில் வெளியாகின.

விடயம் என்னவென்றால், ட்ரூடோவுக்கும் கிராமி விருதுக்கும் சம்பந்தமே கிடையாது. அதேபோல, பெர்ரி ஒரு பாடகி தான் என்றாலும் அவரது பெயர் எந்த பரிசுக்காகவும் பரிந்துரைக்கப்படவும் இல்லை, அவர் நிகழ்ச்சியில் பாடல் எதையும் பாடவும் இல்லை.

அப்படியானால், இந்த ஜோடி எதற்காக கிராமி விருதுகள் வழங்கும் விழாவுக்குச் சென்றது என்று கேட்டால், அவர்கள் இருவரும் அந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ளவே இல்லை என்ற உண்மை தெரியவந்துள்ளது.

ஆம், செயற்கை நுண்ணறிவு மூலம் இப்படி ட்ரூடோவும், பெர்ரியும் கிராமி விருதுகள் வழங்கும் விழாவில் பங்கேற்றதுபோல் படங்களை உருவாக்கி வெளியிட்டுள்ளனர் சிலர்.

வேடிக்கை என்னவென்றால், சமீபத்தில், ட்ரூடோ போல் டான்சிங் என்னும் நடனம் ஆடுவது போலக் கூட ஒரு படம் வெளியாகியுள்ளது!